PR/2018/24/T

# ஜப்பான் தூதரகம்

இல. 20, ஸ்ரீமத் ஆர்.ஜி. சேனானாயக்க மாவத்த, கொழும்பு 7, இலங்கை
தொலைபேசி: 94-11-269-3831~3, தொலைநகல் : 94-11-269-8629
மின்னஞ்சல்: cultujpn@sltnet.lk

ஓகஸ்ட் 27, 2018

ஊடக அறிக்கை

## ஜப்பானிய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் இலங்கைக்கு விஜயம்

ஜப்பானிய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் கட்ஸுயுகி நகானே,ஓகஸ்ற் 28ம் திகதி முதல் 30ம் திகதிவரை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். ஜப்பானிய அரசாங்கத்தின் மானிய உதவித்திட்டத்தின் கீழ் இலங்கைக்கு ஜப்பான் அன்பளிப்புச் செய்துள்ள ரோந்துப் படகுகளை சேவையில் இணைத்துக் கொள்வதற்காக ஓகஸ்ற் 29ம் திகதி கொழும்பு துறைமுகத்தில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காகவே அவர் இந்த விஜயத்தை மேற்கொள்கின்றார்.

இதற்கு மேலதீகமாக, தனது விஜயத்தின் போது இராஜாங்க அமைச்சர் நகானே, இரு நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஏனைய இலங்கை அரசாங்க தலைவர்களுடன் சந்திப்புக்களை நடத்தவுள்ளார்.

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சியின் போது இலங்கையின் கரையோர காவற்படையினருக்கு இரண்டு ரோந்துப்படகுகள் கையளிக்கப்படவுள்ளதுடன் இவை கடற் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் இலங்கையின் கடல் எல்லை மீதான கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படும்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான ‘‘விரிவான பங்களிப்பு’ மேலும் வலுப்பெறுவதற்கு இந்த விஜயம் உறுதுணையாக அமையும் என ஜப்பானிய தூதரகம் எதிர்பார்க்கின்றது.

( முற்றும் )

************************************************************

மேலதீக விபரங்களுக்கு அரசியல் பிரிவினருடன் தொடர்புகொள்ளவும்
தொலைபேசி: 011-269-3831~3 (ext.255)